# திருக்குறள்

# தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
# தீரா இடும்பை தரும்

## விளக்கம்:-

ஒரு செயலைச் செய்வதற்கு ஒருவரை ஆராய்ந்து பார்க்காமல் துணையாகக் கொண்டால் அவரால் நமக்கு நீங்காத துன்பம் வந்தடையும்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

## விளக்கம்:-

இந்த செயலை இந்தக் கருவியால் இவன் செய்து முடிப்பான் என்பதைச் சோதித்து அறிந்த பின்னர் அந்த செயலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

## விளக்கம்:-

நாம் செய்யக்கூடிய செயலை முடிப்பதற்குத் தேவையான கருவிகளுடன் உரிய காலத்தையும் அறிந்து செயல்பட்டால் முடியாத காரியம் எதுவும் இல்லை.

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

## விளக்கம்:-

இறைவனால் முடியாத செயலிலும்,
முயற்சியினால் நாம் வெற்றி பெறலாம்.

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

## விளக்கம்:-

தன்னைப் பெற்றெடுத்த தாய் பசியால் துடித்தாலும் பிறர் பழிக்கக்கூடிய இழிவான செயல்களைச் செய்தல் கூடாது. சிறப்புடைய செயல்களையே செய்தல் வேண்டும்.